# ADM COURT, SANKARANKOVIL

**தேதி: 15-07-2022**

**அசல் வழக்கு எண். 255/2013**

**வா.சா.1 திருமதி.வேலம்மாள்**

**1 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

துரைச்சாமியாபுரம் கிராமத்திற்கும் பிராது தபசில் சொத்து உள்ள கிராமத்திற்கும் சுமார் 1 1/2 கி மீ தொலைவு இருக்கும். வழக்கு தபசில் சொத்து வீரிருப்பு கிராமத்திற்கு செல்ல கூடிய தென்வடல் ரோட்டிற்கு கீழ்புறம் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட நஞ்சை நிலங்கள் வீரிருப்பு கிராமத்தில் வடக்கு புறம் சின்னக்குளம் அருகில் இருந்தது என்றால் சரிதான். அந்த இடத்தை எனது அப்பா உயிரோடு இருந்த போதே அவர் விற்றுவிட்டார். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.5 கொடி வழிஜாபிதா தவறானது என்றால் சரியல்ல. கம்பம்வுண்டர் சுப்பையா அவர்களின் தாயார் பெயர் கூலையாவுஅம்மாள் என்றால் சரிதான். அந்த கூலையாவுஅம்மாள் கோட்டிமுத்து உடன் பிறந்தவர் என்றால் சரிதான். கூலையாவு அம்மாளின் கணவர் பெயர் உடையார் கோனார் என்றால் சரிதான். எனது உடன் பிறந்த சகோதரி சிவனாத்தாள் இறந்து 20 வருடங்கள் ஆகிறது. மேற்படி சிவனாத்தாளின் கணவர் பெயர் அருணாச்சலம். மேற்படி அருணாச்சலம் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டு மதுரையில் உள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பிற்கு அவசியமில்லை என்பதால் 1 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் பதிலறிவுப்பு வழங்கவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை இறந்த பிறகு எங்களுக்கு பாத்தியப்பட்ட ரோட்டிற்கு தென்புறம் இருந்த இடத்தைஎனது சகோதரி முத்தாத்தாளும் சேர்ந்து விற்றுவிட்டோம். நாங்கள் விற்ற சொத்துக்களின் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை விற்பனை செய்து சுமார் 20 வருடங்கள் ஆகிறது. நான் வீரிருப்பு கிராமத்திற்கு சுபாகாரியங்களின் போது வருவேன். தபசில் சொத்துக்கள் பல நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு அதில் அவர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்தின் வடபகுதியில் எனது தந்தை குடிநீர் வசதிக்காக 3 செண்ட் நிலத்தை அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டு அதில் கிணர் வெட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணர் வெட்டப்பட்டு 50 ஆண்டு காலம் இருக்கும். மேற்படி

கிணற்றிற்கு கிழக்கு புறம் செல்போன் டவர் உள்ளது என்றால் சரிதான். மேற்படி செல்போன் டவர் அமைக்கப்பட்டு 20 வருடங்கள் ஆகும். மேற்படி செல்போன் டவரின் மாத வாடகையை ரூ.2000 ஐ 3 ம் பிரதிவாதியின் கணவரான ராமகிருஷ்ணன் தான் வாங்கி வருகிறார் என்றால் சரிதான். மேற்படி கிணற்றிற்கும், செல்போன் டவருக்கும் தென்புறம் 4 ம் பிரதிவாதி அரசப்பன் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி அரசப்பன் வீடு கட்டி சுமார் 10 ஆண்டுகள் இருக்கும். மேற்படி அரசப்பன் வீட்டிற்கு தென்புறம் 3 ம் பிரதிவாதி மருதாத்தாள் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு தென்புறம் உள்ள மீதி இடங்ங்கள் காலி மனையாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி காலி மனைகளை 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி காலிமனைகளுக்கு தென்புறம் தெற்கே பார்த்த வாசல்கள் உள்ள 3 வீடுகள் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகளின் உரிமையாளர் பெயர்கள் எனக்கு தெரியாது. அந்த வீடுகளில் யார் யார் குடியிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி 3 வீடுகளுக்கும் தென்புறம் உள்ள இடங்கள் அனைத்தும் பல நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காலி மனைகளுக்கும் தென்புறம் தற்போது புதிதாக வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீடு யாரால் கட்டப்பட்டது என்று எனக்கு தெரியாது. மேற்படி வீடுகள் மற்றும் காலிமனைகள் தபசில் 1 ம் இனச்சொத்தில் உள்ளது என்றால் சரிதான். தபசில் 1 ம் இனச் சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வரும் நபர்கள் மற்றும் காலி மனைகளை கிரையம் பெற்ற நபர்கள் அனைவரையும் இந்த வழக்கில் நான் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன். மேலே சொன்ன செல்போன் டவர் உரிமையாளரை நான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் சேர்க்கவில்லை. சிவனாத்தாளுக்கு ராமசந்திரன் என்ற மகன் உள்ளார். மேற்படி ராமசந்திரனை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சேர்த்துள்ளேன். 3 ம் பிரதிவாதி மருதாத்தாளின் கணவர் இராமகிருஷ்ணனின் வாரிசுகள் அனைவரையும் நான் இந்தவழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. ராமகிருஷ்ணனின் வாரிசுகள் யார் யார் என்று எனக்கு தெரியாது. தபசில் 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்களை எனது தந்தை யாருக்கு கிரையம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. என் தந்தை குடியிருந்த வீட்டில் தற்போது முத்தாத்தாள் குடியிருந்து வருகிறார். மேற்படி வீட்டை இடித்து விட்டு தற்போது புதிதாக வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த வீட்டை நான் வழக்கு தபசிலில் காட்டவில்லை என்றால் சரிதான். எனது தந்தை வீரிருப்பு

கிராமத்தில் பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றால் சரிதான். எனதுதந்தை அரசு மூலம் கடன் பெற்று தபசில் பிராது தபசில் 1வது அயிட்ட சொத்தில் கிணறு வெட்டினார் என்றால் சரிதான். எனது தந்தை உயிரோடு இருந்த காலம் வரை அந்த கடனை செலுத்தவில்லை என்றால் சரிதான். அதனால் மேற்படி தபசில் 1ம் இன சொத்து முழுவதையும் அரசாங்கம் கையகப்படுத்திவிட்டது என்றால் சரிதான். அவ்வாறு அரசாங்கம் தபசில் 1ம் இன சொத்தை கையகப்படுத்திய பிறகு 1ம் தபசில் சொத்தை வருவாய் ஆவணங்களில் சர்கார் புறம்போக்கு என்று வகைப்படுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்படி கடனை 1ம் பிரதிவாதி தான் செலுத்தினார் என்றால் சரியல்ல. நானும் சிவனாத்தாளும், முத்தாத்தாளும் சேர்ந்து கடனை செலுத்தினோம். தபசில் 1ம் இன சொத்தை சர்கார் புறம்போக்காக வகைப்படுத்திய பிறகு நிலம் ஒப்படைப்பு செய்வதற்காக வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து எனக்கு அறிவிப்பு வந்ததா என்றால் எனக்கு வரவில்லை என்னை விசாரிக்கவில்லை. மேற்படி அரசாங்க கடனை நாங்கள் மூன்று பேரும் செலுத்தியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. தபசில் 1ம் இன சொத்தின் அமைப்பை காட்டுவதற்கு நான் நீதிமன்ற ஆணையர் நியமிக்க மனு தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்தால் வழக்கின் உண்மை நிலவரம் தெரிந்துவிடும் என்பதால் நான் நீதிமன்ற ஆணையரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வில்லங்க சான்று பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. தபசில் 1ம் இன சொத்தில் அனுபவத்தில் இருந்து வரும் நபர்கள் பற்றிய விபரம் மேற்படி வில்லங்கம் பார்த்திருந்தால் புலப்படும் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்துக்களில் நான் எந்த காலத்திலும் கூட்டு அனுபவத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்களை முத்தாத்தாள் பெயருக்கு ஒப்படைவு செய்த போது என்னை வட்டாட்சியர் விசாரித்த போது தபசில் சொத்துக்களை முத்தாத்தாள் பெயருக்கு ஒப்படைவு வழங்கலாம் என்று நான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்களில் 3 ல் 2 பங்கை சிவனையா என்பவருக்கும் ராமகிருஷ்ணன் என்பவருக்கும் 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அவர்களுக்கு கிரையம் கொடுத்த விபரம் பற்றி எனக்கு தெரியாது. முத்தாத்தாள் விற்பனை செய்த கிரைய ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்வில்லை. 1ம் தபசில் சொத்தை கிரையம் பெற்று அனுபவித்து வரும் நபர்களின் கிரைய ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் முத்தாத்தாளை நம்பி நாங்கள் அனைத்து காரியங்களையும் பொது நன்மைக்காக செய்தோம் என்று கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்களை அரசாங்கம் முத்தாத்தாள் பெயருக்கு ஒப்படைவு செய்த காலம் முதல் முத்தாதாளும் சிவனையாவும் ராமகிருஷ்ணனும் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சட்ட சிக்கல் ஏற்படக்கூடாது என்பதற்காக தான் தபசில் சொத்துக்களை 1ம் பிரதிவாதி பெயரில் ஒப்படைவு செய்ப்பட்டதாக நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பிராது 1ம் அயிட்ட சொத்திற்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எனது கோரிக்கை காலவாதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் காவல் நிலையத்தில் புகார் அளித்து வழக்கு நடந்தது என பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால்சரியல்ல. பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் சிலரின் துாண்டுதலின் பேரில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(2 மற்றும் 3 ம் பிரதிவாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)